## 22. தலைப்பு 22 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

---

### 22.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 06 ஆந் திகதி திணைக்களத் தலைவரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 22.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 22.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும்

இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 22.4 இலிருந்து 22.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

அலுவலகத்தினால் 2013 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| தலைப்பு/விடய இலக்கம் | கணக்கின் பெயர் |
|---|---|
| 22 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| 02201 | அரங்சாங்க உத்தியோகத்தர்களிற்கு முற்பணங்கள் தொடர்பான இணக்கக் கூற்று |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணல்**

அலுவலகத்தினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணிவரப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க செலவின முகாமைத்துவம்**

2012 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளிலிருந்து மீண்டெழும் நிதியேற்பாடுகளில் 2 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட வேண்டிய இருந்த போதிலும் அலுவலகத்தினால் மீண்டெழும் நிதியேற்பாடுகளில் 0.78 சதவீதம் மாத்திரமே சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

---

(i) 02201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 62,988 கூட்டுமொத்தமாக இருந்தது.

(ii) திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி கணனி அறிக்கைகளின் பிரகாரம் 15 வருடம் தொடக்கம் ரூபா 4,921 தொகையான வேறுபாடு காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போதும் இதனைத் தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளிற்கிடையே ரூபா 36,758 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

## 22.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 22.4.1 உள்ளகக் கணக்காய்வு

---

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 22.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

---

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 22.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க

அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பாராளுமன்றத்தினால் அந்த அறிக்கை 2013 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2011 ஆம் ஆண்டிலேயே பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளிலிருந்து சுட்டிக் காட்டப்பட்டிருந்த பற்றாக்குறைகள் தொடர்பாகவும் ஏனைய சிபார்சுகள் தொடர்பாகவும் நிதிப் பிரமாணம் மற்றும் 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்கம் அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(அ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலகத்தின் தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்கள் ரூபா 51,614 ஆனதுடன் அவை ஒரு ஆண்டிற்கும் குறைவான காலத்திலிருந்து நிலவி வருவனவாகும்.

## 22.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 1 | 1 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 2 | 1 | 1 |
| (இ) | இரண்டாம் நிலை | 18 | 9 | 9 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 8 | 2 | 6 |
| (உ) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை | 1 | 1 | - |
| | மொத்தம் | 30 | 14 | 16 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.